DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 123/2024 |
| P.W. | : | 1 |
| Name | : | திரு. வெங்கடேஷ்வரன் |
| Father Name | : | திரு. பாலுச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.08.2025.

எதிரி கள் ஆஜர்

**முதல் விசாரணை :-**

நான் கோபி இந்திரா நகரில் குடியிருந்து மரக்கடை வைத்து நடத்தி வருகிறேன். இறந்துபோன பாலுச்சாமி எனது அப்பா. ஆஜர் எதிரிகளைத் தெரியும். 12-05-2024 அன்று இரவு 7-7.15 மணி அளவில் காமராஜர் நகர் டாஸ்மாக் கடையிலிருந்து பச்சையப்பன் என்பவர் எனக்கு போன் செய்து டாஸ்மாக் கடையில் ஏதோ பிரச்சனை என்றும், என் அப்பாவுக்கும், 2 இளைஞர்களுக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், அதில் ஒரு நபர் என் அப்பாவை தாக்கிவிட்டதாகவும், என்

அப்பாவுக்கு அதிகமாக ரத்தப்போக்கு ஏற்பட்டுவிட்டதாகவும் கூறி என்னை வரச்சொன்னார். என் அப்பாவை பீர் பாட்டிலால் அடித்துவிட்டதாகவும் சொன்னார். அடித்தவர் பெயர் கௌதம் மற்றும் விக்னேஷ் என்று சொன்னார். நான் உடனடியாக காமராஜர் நகர் டாஸ்மாக் கடைக்கு சென்றேன். அங்கு பார் நடத்திக்கொண்டுள்ள சோலை மற்றும் தேவேந்திரன் ஆகியோர்களிடம் நான் விசாரித்தேன். அப்போது என் அப்பா 2 சிறிய வயதுள்ள பையன்கள் மது அருந்திக்கொண்டிருந்ததாகவும், ஏன் சிறு வயதில் மது அருந்துகிறீர்கள் என்று என் அப்பா கேட்ட சமயம் அந்த நபர்கள் நாங்கள் எப்படி வேணாலும் போவோம் உங்களுக்கு என்ன என்று கேட்ட சமயம் கௌதம் என்பவர் என் அப்பாவை கன்னத்தில் அறைந்து கீழே தள்ளி விட்டதாகவும், கௌதம் மற்றும் விக்னேஷ் என் அப்பாவின் நெஞ்சில் மிதித்ததாகவும், என் அப்பா பயந்துகொண்டு டாஸ்மாக் கடையில் சமையல்கட்டுக்கு சென்றுள்ளார். அவருக்கு பின்னால் வந்த விக்னேஷ் பீர் பாட்டிலால் என் அப்பாவின் பின் தலையில் வலதுபுறமாக அடித்துள்ளார். என் அப்பா அங்கேயே மயக்கமடைந்து கீழே விழுந்துள்ளார். உடனடியாக பாரில் உள்ள மேற்படி சோலை மற்றும், தேவேந்திரன் மற்றும் சிலர் வண்டியை பிடித்து என் அப்பாவை எனது மரக்கடைக்கு அனுப்பிவைத்ததாக சொன்னார்கள். நான் மரக்கடைக்கு வந்து பார்த்தபோது என் அப்பா மயங்கிய நிலையில் படுத்துக் கிடந்தார். நான் காரை வரவழைத்து என் அப்பாவை அதில் ஏற்றிக்கொண்டு கோபி அபி மருத்துவமனைக்கு அழைத்துசென்று இரவு 8 மணிக்கு அட்மிட் செய்தேன். அவருக்கு முதலுதவி அளித்தனர். பின்னிட்டு மேல்சிகிச்சைக்காக பெருந்துறை அரசு மருத்துவமனைக்குஅனுப்பிவைத்தனர். என் தகப்பனார் போகும்வழியிலேயே

சுயநினைவை இழந்துவிட்டார். அதனால் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அவரை அழைத்துசெல்லாமல் கோபி அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்துவிட்டேன். அங்கிருந்த மருத்துவர் என் அப்பாவை பரிசோதித்துவிட்டு அவர் ஏற்கனவே காலமாகிவிட்டதாக சொன்னார். அவரது உடலை சவக்கிடங்கிற்கு அனுப்பிவைத்தார்கள். இது குறித்து அன்று இரவே நான் சிறுவலூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதற்கு முன்பாக காவல்நிலையம் செல்லும் வழியில் காமராஜர் நகர் பாருக்கு சென்று மறுபடியும் சோலை, மற்றும் தேவேந்திரனிடம் விசாரித்து என்ன நடந்தது என்று முழுமையாக கேட்டுத் தெரிந்துகொண்டேன். ஏற்கனவே 6 மாதத்திற்கு முன்பே மேற்படி இருவருக்கும் என் அப்பாவுக்கும், என் அப்பா சிறுவயதில் ஏன் மது அருந்துகிறீர்கள் என்ற கேட்ட சமயம் மேற்படி இருவரும் என் அப்பாவிடம் தகராறு செய்ததாக சொன்னார். அந்த சமயத்தில் பாரில் இருந்தவர்கள் சமாதானப்படுத்தி அனுப்புள்ளார்கள். சம்பவத்திற்கு 2 மாதத்திற்கு முன்பும் அதுபோன்று சம்பவம் நடந்துள்ளது. எனவே அடிக்கடி இப்படியே பேசிக்கொண்டிருந்தால் உங்களை போட்டுதள்ளிவிடுவோம் என்று மேற்படி இருவரும் எச்சரித்ததாகவும் சொன்னார்கள். பின்னிட்டு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் நான் கொடுத்தது. **புகார் அ.சா.ஆ.1.** முதல் தகவல் அறிக்கையின் நகலை எனக்கு கொடுத்தார்கள். அதில் நான் கையெழுத்துசெய்துள்ளேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.2.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் M.E படித்துள்ளேன். நான் அரசு வேலைக்கு செல்லவில்லை. தனியார் வேலைக்கு சென்றேன். எனது மர அரவை மில் எத்தனை மணிக்கு திறந்து எத்தனை மணிக்கு மூடுவேன் என்றால் காலை 8 மணிக்கு திறந்து இரவு 7-8 மணி அளவில் மூடுவேன். என் அப்பாவுக்கு காயமேற்பட்டது என்ற விபரத்தை யார் எனக்கு சொன்னது என்றால் டாஸ்மாக்கில் இருந்த பச்சையப்பன் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். மேற்படி பச்சையப்பனுக்கு எவ்வாறு எனது செல்நெம்பர் தெரியும் என்றால் அவர்கள் கடைக்கு வந்து கடையில் இருந்த போர்டில் எனது நம்பர் இருந்தது அதைப் பார்த்து போன் செய்துள்ளார். போர்டில் எனது நம்பர் உள்ளது என்றும், அந்த நம்பரை பார்த்துதெரிந்துகொண்டு எனக்கு தகவல் சொல்லப்பட்டது என்ற விபரத்தை புகாரில் சொல்லவில்லைஎன்றால் சரிதான். போர்டில் எத்தனை நம்பர்கள் உள்ளது என்றால் என்னுடைய நம்பரும், என் அப்பாவின் நம்பரும் உள்ளது. சம்பவ சமயத்தில் என் அப்பா மொபைல் வைத்திருந்தாரா என்றால் அவரிடம் இருந்தது ஆனால் சம்பவ சமயத்தில் எடுத்துசெல்லவில்லை. பச்சையப்பன் என் கடை போர்டில் உள்ள நம்பரை பார்த்துவிட்டு தான் எனக்கு போன் செய்ததாக சொல்கிறேன் என்றால் ஆமாம். மேற்படி விபரத்தை எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். தகவல் கிடைத்தவுடன் நான் பாருக்கு சென்றேனா அல்லது மில்லுக்கு சென்றேனா என்றால் பாருக்கு சென்றேன். நான் பாருக்கு சென்ற சமயம் என் தகப்பனார் அங்கு இருக்கவில்லை என்றால் சரிதான். நான் பாருக்கு தான் முதலில் சென்றேன் என்ற விபரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். என் அப்பாவை மில்லுக்கு யார் யார் கொண்டு சென்றார்கள் என்ற விபரத்தை அங்கு சொன்னார்களா என்றால் பெயர் குறிப்பிட்டு

சொல்லவில்லை ஆனால் மில்லுக்கு போக்குவண்டி மூலம் கொண்டு சென்றதாக சொன்னார்கள். நான் பாருக்கு சென்றுவிட்டு மில்லுக்கு வந்த சமயம் என் அப்பா பேசும் நிலையில் இருந்தார் என்றால் இல்லை. அடிபட்ட என் அப்பாவை ஏன் மருத்துவமனைக்கு அனுப்பவில்லை என்று கேட்டேனா என்றால் விசாரித்தேன் ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்காக வண்டியில் அனுப்பியதாக சொன்னார்கள். போக்குவண்டிக்காரருக்கு என் அப்பாவின் மில் எங்குள்ளது என்று அவருக்கு தெரியுமா என்றால் அவருக்கு தெரியும். போக்குவண்டிக்காரர் தான் என்அப்பாவை மில்லில் இறக்கிவிட்டார் என்ற விபரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான் மில்லுக்கு வந்து பார்த்த சமயம் என் அப்பா ரத்தக்கசிவுடன் பேச்சுவார்த்தையில்லாமல் கிடந்தார் என்றால் ஆமாம். என் அப்பாவுடன் மில்லில் யார் இருந்தார்கள் என்றால்மில்லில் வேலை செய்யும் 2 நபர்கள் இருந்தார்கள். மேற்படி 2 நபர்கள் இரத்தக்கசிவுடன் என் அப்பாவை மில்லில் இருக்க வைத்திருந்தார்கள் என்ற விபரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் நடந்து முடிந்த நேரம் என்னவென்றால் இரவு 7.45 மணி இருக்கும். மேற்படி நேரத்தில் மில் பூட்டப்பட்டிருக்கும் என்றால் 7 மணியிலிருந்து 8 மணிக்குள் பூட்டுவோம். நானும், என் அப்பாவும் மில்லில் இல்லாத நிலையில் மில் பூட்டப்பட்டிருக்கும் என்றால் சாதாரணமாக 7-8 மணிக்குள் பூட்டுவோம். வாட்ச்மேன் இருந்துள்ளார் எனவே பூட்டவில்லை. என் அப்பா அடிபட்டு மில்லில் இருக்கும்போது வாட்ச்மேன் இருந்தாரா என்றால் ஆமாம். வாட்ச்மேன் மேற்படி என் அப்பாவுக்கு அடிபட்டு மில்லில் இருப்பதாக தகவல் சொன்னாரா என்றால் இல்லை. பாரில் தகராறு நடந்தது குறித்து பார் மூலமாக

காவல்நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 7 லிருந்து 8 மணிக்குள் நான் பாரில் தகராறு நடந்து என் அப்பாவை அடித்துவிட்டார்கள் என்று அப்போது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. முதன்முதலில் மில்லிருந்து என் அப்பாவை 8.10 மணிக்கு தனியார் மருத்துவமனைக்கு அழைத்துசென்றேன் என்றால் ஆமாம். மேற்படி தனியார் மருத்துவமனையிலிருந்து போலீசுக்கு ஒரு நபர் அடிபட்டு சிகிச்சைக்கு வந்தார் என்ற விபரத்தை சொன்னார்களா என்றால் ஆமாம். தனியார் மருத்துவமனையில் எவ்வளவு நேரம் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சுமார் 1.1/2 மணி நேரம் இருக்கும். இடைப்பட்ட 1.1/2 மணி நேரத்தில் நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம் மருத்துவமனையில் தான் இருந்தேன். என் வீட்டிலிருந்து என் தாயார் மற்றும் என் உடன் பிறந்தவர்கள், உறவினர்கள் மருத்துவமனைக்கு வந்தார்களா என்றால் இல்லை. என் அப்பாவுக்கு சிகிச்சை தொடங்கும்போதும், சிசிக்சை முடிக்கும்போதும் என் அப்பா ஏதாவது என்னிடம் பேசினாரா என்றால் இல்லை. ஆம்புலன்சில் எந்த இடத்திற்கு செல்லும்போது என் அப்பாவுக்கு பேச்சுமூச்சில்லை என்று தெரிந்துகொண்டேன் என்றால் சரியாக இடம் எனக்கு சொல்ல இயலவில்லை. ஆம்புலன்சில் முதலுதவி சிகிச்சை அளிக்கும் உதவியாளர் இருந்தாரா என்றால் ஆமாம். தனியார் மருத்துவமனையில் என் அப்பாவை பரிசோதித்த மருத்துவர் என் அப்பா அதிகமாக மது அருந்தியிருந்தார் என்ற விபரத்தை சொன்னாரா என்றால் ஆமாம். 11.20 மணிக்கு கோபி அரசு மருத்துவமனைக்கு என் அப்பாவை கொண்டு வந்து அவரை பரிசோதித்த மருத்துவர் அது குறித்து காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னாரா என்றால் தெரியவில்லை. என்னை மருத்துவர் விசாரித்தாரா என்றால்

விசாரிக்கவில்லை. என்னை 12.05-2024 அன்று இரவு 11.10 மணிக்கு மருத்துவ அதிகாரி விசாரித்தார் என்றும், எனது செல் எண் 7904541512-ஐ குறித்துக்கொண்டு அரசு மருத்துவமனையில் உள்ள போலீஸ் அவுட்போஸ்ட்டுக்கு தகவல் சொன்னார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. பணியில் இருந்த மருத்துவர் யார் என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லையா என்றால் ஆமாம். 12-05-2024 அன்று இரவு 7 மணி அளவில் என் அப்பாவுக்கு அடிபட்டு விட்டது என்றும், அன்று இரவு 11.10 மணிக்கு என் தகப்பனார் காலமாகிவிட்டார்என்றும் தெரிந்து 13-05-2024 அன்று காலை 4.00 மணி அளவில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி காலதாமதத்திற்கு என்ன காரணம் என்றால் அரசு மருத்துவமனையிலிருந்து கிளம்பும்போது நடு இரவு 12 மணிக்கு மேல் இருக்கும், போகும்வழியில் டாஸ்மாக்கிற்கு சென்று விசாரிக்க சென்றேன் அங்கு சோலை, தேவேந்திரன் ஆகியோர்களிடம் விசாரித்துசெல்ல 1-1.1/2 மணிநேரம் ஆனது பின்னிட்டு சிறுவலூர் காவல்நிலையம் செல்லும்போது 3-3.30 மணி இருக்கும், அங்கு எஸ்.ஐ ராஜமாணிக்கம் இருந்தார் அவரிடம் நடந்ததைச் சொன்னேன். அவர் புகாரைப் பெற்றுக்கொண்டார். நான் என் தகப்பனார் இறந்தபின்னிட்டு பாருக்கு சென்று அங்கிருந்த நபர்களிடம் விசாரித்து நடந்த விபரங்களை தெரிந்துகொண்டு அதன்பின்னிட்டு தான் புகார் கொடுத்தேன் என்ற விபரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். குறிப்பாக சோலை மற்றும் தேவேந்திரன் , பச்சையப்பன் ஆகியோர்களிடம் விசாரித்து திருப்தி அடைந்த பிறகு தான் புகார் கொடுத்தாக சொல்லியுள்ளேனா என்றால் விசாரித்ததாக சொல்லியுள்னேன். நான் சொல்வது தவறு என்றும், அதுபோன்ற விபரத்தை புகாரில்

சொல்லவில்லை என்றும், தற்போதுதான் இந்த வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதியது என்றால் நான் என் கைப்பட எழுதினேன். அ.சா.ஆ.1 புகாரில் முதல் பக்கத்தில் எழுத்துக்கள் நெருக்கமாகவும், 2 வது பக்கத்தில் எழுத்துக்கள் இடைவெளி விட்டும் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என்னிடம் பெற்ற புகார் முதல் தகவல் அறிக்கை எவ்வளவு நேரத்தில் கணினியில் தயாரிக்கப்பட்டது என்றால் தெரியவில்லை. புகார் கொடுத்த பின்னிட்டு வெளியே இருக்குமாறு சொன்னார்கள். முதல் தகவல் அறிக்கையின் நகல் எப்போது எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் மறுநாள் காலையில். புகார் கொடுக்கும்போது யாரும் என்னுடன் வரவில்லை என்றால் கடையில் வேலை செய்யும் 2 நபர்கள் வந்தார்கள். நான் கொடுத்த புகாரில் அந்த நபர்கள் சாட்சி கையெழுத்திட்டுள்ளார்களா என்றால் இல்லை. 6 மாதத்திற்கு முன்பாகவும், 2 மாதத்திற்கு முன்பாகவும் என் அப்பா மேற்படி எதிரிகளிடம் சிறு வயதில் ஏன் மது அருந்துகிறீர்கள் என்று கேட்டசமயம் அப்போதும் தகராறு ஏற்பட்டதாக கூறியுள்ள நிலையில் அது குறித்து புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு எதுவும் புகாரில் சொல்லவில்லை, தற்போதுதான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ஒரு சம்பவம் நடந்திருந்தால் அது குறித்து ஏற்கனவே புகார் கொடுக்கப்பட்டிருக்கும் என்றும், அதுபோன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாய்வார்த்தை என்பதால் தான் புகார் கொடுக்கவில்லை. எவ்வாறு சம்பவம் நடந்தது என்பது பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். என் அப்பா முழுநேரமாக குடிக்கும்பழக்கம்

உடையவர் என்றால் இல்லை 2 நாட்களுக்கு ஒருமுறை இரவு நேரத்தில் குடிப்பார். என் அப்பாவுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், அப்பாவுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது, அவரை மருத்துவர் மது அருந்தக்கூடாது என்று அறிவுரை கூறியுள்ளார்கள் என்றால் தவறு. அவருக்கு இருதய நோய் எதுவுமில்லை. என் அப்பாவுக்கு அடிபட்டு இரத்தம் வடிந்ததாக கூறும் நிலையில் மில்லில் ரத்தக்கறை படிந்த மண்ணை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் கைப்பற்றவில்லை. மில்லில் போலீசார் வரைபடம் வரைந்தார்களா என்றால் இல்லை. போலீசார் என் அப்பாவை சட்டையை கைப்பற்றியது குறித்து என்னிடம் சாட்சி கையெழுத்துபெற்றார்களா என்றால் வாய்வார்த்தையாகத் தான் சொன்னார்கள். கையெழுத்துபெறவில்லை. எனக்கு பாரில் என்ன நடந்தது என்ற விபரம் தெரியவில்லைஎன்றும், அதனால் தான் அங்கு சென்று விசாரித்து காலதாமதமாக ஒரு புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல அன்றைய தினமே கொடுத்தேன். ஏற்கனவே 6 மாதத்திற்கு முன்பாக ஒரு சம்பவம் நடந்ததாக கூறும் நிலையில் அப்போதிருந்தே என் தகப்பனார் அடிக்கடி பாருக்கு சென்று குடிக்கும் பழக்கம் வைத்திருந்தார் என்றால் ஆமாம். ஏற்கனவே 2 சம்பவங்கள் நடந்ததாக கூறும் நிலையில் அது குறித்து என் அப்பா என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

**மறு விசாரணை இல்லை.**

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 123/2024 |
| P.W. | : | 2 |
| Name | : | திரு. சோலை |
| Father Name | : | திரு. கிட்டு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.08.2025.

**எதிரிகள் ஆஜர்**

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் கொளப்பலூர், காமராஜர் நகரில் குடியிருந்து, காமராஜர் நகர் பாரில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் 1வதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். 2 வதாக உள்ள ரேகை தேவேந்திரனுடையது. **பார்வை மகசர் அ.சா.ஆ.3.** 12-05-2024 அன்று இரவு 7.15 மணி அளவில் பாலுச்சாமி என்பவர் எங்கள் பாரில் மது அருந்திக்கொண்டிருந்தார். அப்போது 2 பையன்கள் விக்னேஷ், கௌதம்

வந்து, பாலுச்சாமி அருகே உள்ள டேபிளில் உட்கார்ந்து மது அருந்தினார்கள். அப்போது அவர்கள் இருவருக்கும், பாலுச்சாமிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. கௌதம் பாலுச்சாமியை அறைந்தார். சண்டையை நாங்கள் விலக்கிவிட போனோம். அப்போது அடிதடி முற்றி மாறி மாறி அடித்துக்கொண்டார்கள். வார்த்தை முற்றிபோனது. அப்போது பாலுச்சாமி சமையல் கட்டிற்கு ஓடினார். அப்போது விக்னேஷ் பாட்டிலால் பாலுச்சாமியின் தலையில் அடித்தார். அதனால் பாலுச்சாமிக்கு தலையில் ரத்தம் வந்தது. பாரில் மது அருந்திக்கொண்டிருந்த ஒரு நபரின் பைக்கில் ஏற்றி பாலுச்சாமியை அனுப்பிவைத்தோம். அதன்பின்னிட்டு அவருடைய மகன் வந்தார் எங்களிடம் என்ன நடந்தது என்று விசாரித்தார். அவரிடம் நடந்ததை கூறி பைக்கில் அவரது அப்பாவை வீட்டிற்கு அனுப்பிவைத்ததாக சொன்னோம். போலீசார் அன்று விடியற்காலை 5 மணிக்கு பாருக்கு வந்து விசாரித்து அங்கிருந்து உடைந்தபோன பாட்டிலை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். அதில் நான் கையெழுத்துசெய்தேன். தேவேந்திரன் ரேகை வைத்தார். **பாட்டில்கள் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசர் அ.சா-ஆ.4. சிறிய பாட்டில் ஒன்று சா.பொ.1. பெரிய பாட்டில் துண்டு சா.பொ. 2.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் டாஸ்மாக் பார் லைசென்ஸ் பெற்றுள்ளேனா என்றால் ஆமாம். அவ்வாறு பெற்றதாக கூறும் லைசென்ஸ்-ஐ போலீசார் விசாரிக்கும்போது அவர்களிடம் கொடுத்னோ என்றால் ஆமாம். என்னிடம் பார் லைசென்ஸ் உள்ளது, டிடி நெம்பர் உள்ளது, டின் நெம்பர் உள்ளது என்ற விபரத்தை சொன்னேனா என்றால் ஆமாம்.

பாருக்கு தினமும் தோராயமாக எத்தனை நபர்கள் வருவார்கள் என்றால் 300 நபர்கள் வருவார்கள். பாருக்கு வரும் அனைத்து நபர்களின் பெயர், விலாசம் வைத்துள்ளேனா என்றால் அனைத்து நபர்களின் பெயர் எனக்கு தெரியாது. 12-05-2024 அன்று இரவு 7 மணிக்கு எத்தனை நபர்கள் பாருக்கு வந்தார்கள் என்றால் சுமார் 15 வந்தார்கள். 15 நபர்களின் பெயர், ஊர், விலாசம் தெரியுமா என்றால் தெரியாது நபர்களை பார்த்தால் தான் தெரியும். பார் எத்தனை மணிக்கு மூடவேண்டும் என்று அரசு உத்தரவு உள்ளது என்றால் இரவு 10 மணிக்கு. இரவு 10 மணிக்கு பின்னிட்டு பாரை சுத்தப்படுத்துவோம் என்றால் இல்லை. எங்கள் பாரில் எத்தனை கேமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் நான்கு. கேமிராவில் பதிவுகள் எத்தனை நாட்களுக்கு சேமித்துவைக்கப்படும் என்றால் 1 மாதத்திற்கு சேமித்துவைக்கப்படும். அன்றைய தினம் 4 கேமிராக்களும் இயங்கிக்கொண்டிருந்தது. ஒருமாதத்தில் பதிவான விபரங்கள் அனைத்தும் சேமித்து வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். 7.15 மணிக்கு நடந்ததாக கூறும் சம்பவத்திற்கு நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு பின்னிட்டு பாரில் பொருத்தப்பட்டிருந்த கேமிராவில் பதிவாகியிருந்த பதிவுகளை நான் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. என்னை போலீசார் விசாரித்த சமயம் முதலில் வாக்குவாதம் ஏற்பட்டது, பின்னிட்டு இருதரப்பினரும் மாறி மாறி அடித்துக்கொண்டார்கள் நாங்கள் விலக்கிவிட்டோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்த சமயத்தில் 2 ம் எதிரிக்கு தலையில் அடிபட்டு ரத்தம் வழிந்துகொண்டிருந்தது என்றால் ஆமாம். சம்பவ சமயத்தில் இறந்துபோன நபர் 2 ம் எதிரியை இரும்புராடால் தாக்கி அவருக்கு காயமேற்பட்டது என்றால்

இருதரப்பினரும் சண்டை போட்டுக்கொண்டார்கள் அதில் காயமேற்பட்டது. அப்போது 2ம் எதிரிக்குதான் ரத்தம் வழிந்த காயம் ஏற்பட்டது என்றால் காயம் இருந்தது உண்மை. சம்பவம் நடந்த பின்னிட்டு உடனடியாக பாருக்கு போலீசார் வந்தார்களா என்றால் போலீசார் நேரடியாக வரவில்லை, போனில் கேட்டார்கள். அடிபட்ட பாலுச்சாமியை போக்கு வண்டியில் அனுப்பியதாக கூறும் நிலையில் அந்த நபர் யார் என்றால் அவர் யார் என்று தெரியவில்லை. அடிபட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பாமல் போக்குவண்டியில் அனுப்பியதற்கு காரணம் என்னவென்றால் அந்த நபர் அடிபட்ட நபருக்கு தெரிந்தவர் என்று கூறி அழைத்துசென்றார். போக்குவண்டியில் பாலுச்சாமியை அனுப்பிய சமயத்தில் அவர் அதிகமாக மது அருந்தியிருந்தார் என்றால் ஆமாம். அவருக்கு பேசும் அளவுக்கு சுயநினைவு இருந்ததா என்றால் ஆமாம். அந்த நபர் அவரது மகனுக்கு தகவல் சொல்ல அவருடைய மொபைல் போனை என்னிடம்கொடுத்தாரா என்றால் இல்லை. அவரிடம்மொபைல் போன் இருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும், அவர் மொபைல் போன் வைத்திருந்ததாகவும், அது எனக்கு தெரிந்திருந்தும், மொபைல் போன் இருந்ததா இல்லையா என்று எனக்கு தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.3 பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று படித்து பார்த்து கையெழுத்துபோட்டேனா என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தில் நான் நடத்தி வரும் பாரின் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பாரில் 4 கேமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்ற விபரம் எழுதப்படவில்லை என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தில் எழுத்துப்பிழை உள்ளது

என்றால் ஆமாம். குறிப்பாக எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என்று மேற்படி ஆவணத்தில் குறிப்பு இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.4 ஆன கைப்பற்றுதல் மகசரில் இடைச்செருகலாக 6 வது பத்தியில் சொத்து விபரத்தில் உடைந்த கண்ணாடி பீர் பாட்டில் ஒன்று என்று எழுதி இடைப்பட்ட பகுதியில் Strong என்று இடைச்செருகல் எழுதியும் மற்றும் அதற்கு கீழே தலைப்பகுதி என்றும், 2 வது பத்தியில் உடைந்த கண்ணாடி பீர் பாட்டில் துண்டுகள் 3 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றுதல் மகசர் எத்தனை மணிக்கு தயாரிக்கப்பட்டது என்றால் காலை 5 மணி இருக்கும். மேற்படி கைப்பற்றுதல் மகசர் காவல் ஆய்வாளர் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்து பின்னிட்டு என்னிடம் கையெழுத்துபெற்றார்கள், அதனால் தான் இடைச்செருகலாக வார்த்தைகள் பின்னிட்டு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. சா.பொ.1 மற்றும் 2 உடைந்த பாட்டில்களை ஒன்றிணைத்தால் முழுமையான பீர் பாட்டில் ஆகாது என்றால் சரிதான். 3 துண்டுகளில் ரத்தக்கறை படிந்திருந்ததை நான் பார்த்தேனா என்றால் ஆமாம். மேற்படி பாட்டில் துண்டுகளில் ரத்தக்கறை எதுவுமில்லை, 3 பாட்டில் துண்டுகளையும் இணைத்தால் முழுமையான பீர் பாட்டில் வராது என்றும், நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் ரத்தக்கறை இருந்திருந்தால் போலீசார் அதனை ஆய்வுக்கு உட்படுத்தியிருப்பார்கள் என்றும், ரத்தக்கறை இல்லை என்பதால் தான் ஆய்வுக்கு உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு அனுமதி பெற்ற பார் உரிமையாளர் அல்ல என்றும், சட்டத்திற்கு புறம்பாக பார் நடத்தி வருவதால் தான் போலீசாருக்கு பயந்து அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவத்திற்கு பின்னிட்டு அ.சா.1 என்னை எத்தனை முறை விசாரித்தார் என்றால் முதலில் 7.30 மணிக்கும், பின்னிட்டு 12.30 மணிக்கும் வந்து விசாரித்தார். எவ்வளவு நேரம் எங்களிடம் பேசினார் என்றால் முக்கால்மணிநேரம் இருக்கும். நான் காவல்நிலையத்திற்கு அவருடன் சென்றேனா என்றால் இல்லை. சட்டத்திற்கு புறம்பாக பார் நடத்தி வருவதால் தான் பாரின் உரிமம் எண், டின் நெம்பர் ஆகியவற்றை போலீசார் விசாரணையில் சொல்லவில்லைஎன்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் உண்மையாக நடந்த சம்பவத்தை திரித்துக்கூறி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாலுச்சாமி என்பவர் தான் 2ம் எதிரியை தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தினார் என்றும், அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை விசாரித்தார்கள். 2 முறையும் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்களா என்றால் ஆமாம். நடந்த சம்பவங்கள் அனைத்தும் சிசிடிவி-ல் பதிவாகியுள்ளது என்ற விபரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் ஆமாம். பதிவாகியிருந்த Hard Disk -ஐ மறுபடியும் போலீசார் என்னிடம் ஒப்படைத்தார்களா என்றால் ஆமாம். மேற்படி Hard Disk -ல் 4 கேமிராக்களில் பதிவாகியிருந்த பதிவுகள் இருந்ததா என்றால் ஆமாம்.

**மறு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | | |
|---|---|---|
| SC.No. | : | 123/2024 |
| P.W. | : | 3 |
| Name | : | திரு. சுப்பிரமணியம் |
| Father Name | : | திரு. ரங்கசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.08.2025.

எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை :-**

நான் கலிங்கியம் சின்னக்குளம் என்ற ஊரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். நானும், மோகன்ராஜ் என்பவரும் நண்பர்கள். நாங்கள் வழக்கம்போல் டாஸ்மாக் பாருக்கு மது அருந்த சென்றோம். 12-05-2024 அன்று இரவு 7.15 மணி அளவில் வழக்கம்போல் டாஸ்மாக் பாரில் மது அருந்திக்கொண்டிருந்தோம். பக்கத்து டேபிளில் ஒரு சத்தம் கேட்டது. பாலுச்சாமியும், கௌதம், விக்னேஷ் ஆகியோர்கள் சத்தம் போட்டு கைகலப்பு

செய்தார்கள். அவர்களுக்-குள் அடித்துக்கொண்டார்கள். நாங்கள் கைகலப்பை தடுத்தோம். அந்த நபர் கீழே விழுந்துவிட்டார். அவரை எதிரிகள் ஏறி மிதித்தார்கள். அவர் அடி பொறுக்கமுடியாமல் சமையல் கட்டிற்கு ஓடினார். பின்னாடியே சென்ற விக்னேஷ் பீர் பாட்டிலால் தலையில் அடித்தார். நாங்கள் அனைவரும் சமாதானப்படுத்திவெளியே அழைத்துவந்து போக்குவண்டியில் பாலுச்சாமியை அனுப்பிவைத்தோம். பின்னிட்டு நான் கிளம்பிவிட்டேன். பாட்டிலால் அடிபட்டதால் அவருக்கு தலையில் இரத்தம் வந்தது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தினமும் மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் ஆமாம். அவ்வாறு மது அருந்த செல்லும்போது அக்கம் பக்கத்தில் அமர்ந்திருக்கும் நபர்களின் பெயர், விலாசம் கேட்டு தெரிந்துகொள்வேனா என்றால் இல்லை. அங்கு வந்த நபர் பாலுச்சாமி தான் என்று எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் அவர் பக்கத்து ஊரைச் சார்ந்தவர். ஏற்கனவே பாலுச்சாமி என்பவரை எனக்கு பரிட்சியம் என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக கூறும் நேரம் என்னவென்றால் 7.15 மணி. நான் 7.15 மணிக்கு தான் பாருக்கு வந்தேனா என்றால் அதற்கு முன்பே வந்து அமர்ந்திருந்தேன் அதாவது 7 மணி இருக்கும். நானும், மோகன்ராஜும் 7 மணிக்கு வந்து 7.15 மணி அளவில் நடந்த சம்பவத்தை பார்த்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம். மேற்படி சம்பவத்தில் விக்னேஷ்-க்கு தலையில் அடிபட்டு ரத்தம் வந்தது என்றால் அதை நான் சரியாக கவனிக்கவில்லை. பாலுச்சாமி என் பக்கத்து ஊர்க்காரர், நன்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு அடிபட்டவுடன் அவரது மகன்,

மனைவி மக்களுக்கு தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை. அடிபட்ட நபரை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முயற்சி செய்தேனா என்றால் இல்லை வண்டியில் அனுப்பிவைத்தோம். நான் சொல்வதுபோல் எந்த சம்பவத்தையும் நானோ, அல்லது மோகன்ராஜோ நேரடியாக பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இதற்கு முன்பாக காவல்நிலையத்திற்கு ஏதாவது சென்றுள்ளேனா என்றால் இல்லை. போலீசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் 14 ம் தேதி என்னை விசாரித்தார்கள். சம்பவத்திற்கு பின்னிட்டு 2 நாட்களுக்கு பின்னிட்டு விசாரித்தாக சொல்கிறேன் என்றால் ஆமாம். 13 ம் தேதி பாலுச்சாமி இறந்துவிட்டார் என்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் ஆமாம். பாலுச்சாமி இறந்த அன்று 12 ம் தேதியே எனக்கு சம்பவம் பற்றி தெரியும் என்று காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

**மறு விசாரணை இல்லை.**